விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 008 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 12 வெள்ளிக்கிழமை (27.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## மன்மோகன் சிங் காலமானார்



(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தனது 92ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

எய்ம்ஸ் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்று மாலை உடல்நலக் குறைவு காரணமாக அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே அவர் காலமானதாக மருத்துவமனை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மன்மோகன் சிங், செப்ரெம்பர் 26, 1932 இல், மேற்கு பஞ்சாபின் காஹ் கிராமத்தில் பிறந்துள்ளார்.

மேலும் இவர் மே 22, 2004 முதல் மே 26, 2014 வரை இந்தியப் பிரதமராகப் பணியாற்றி வந்தமை குறிப்பிடத் தக்கது. (ம-7)


## சுனாமிப் பேரவலத்தின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல்



05

# கிளிநொச்சி ஒருங்கிணைப்பு கூட்டத்தில் களேபரம்

## அர்ச்சுனா எம்.பி – தம்பிராசா கருத்து மோதல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டது. அர்ச்சுனா எம்.பியும் தம்பிராசாவும் கருத்து மோதலில் ஈடுபட்டதால் கடும் அமளி துமளி ஏற்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று அமைச்சர் சந்திரசேகர் மற்றும் வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் இணைத் தலைமையில் 15

### நான்கு நாள் காய்ச்சல்
## இளம் குடும்பஸ்தர் யாழில் மரணம்

(யாழ்ப்பாணம்)

நான்கு நாள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கைதடி மேற்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நவரத்தினம் தனுசன் (வயது-34) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.


கடந்த 23ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து மறுநாள் 24ஆம் 15

## வவுனியாவில் விபத்து; யாழ்.இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

வவுனியா கோவில் குளம் பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ் இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன் 15



## இலங்கை வரலாற்றில் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு

உள்ளே

## இரணைமடுக்குளத்தின் மேலதிக நீரை ஏன் யாழ்.மக்களுக்கு வழங்க முடியாது

### அர்ச்சுனா எம்.பி கேள்வி



(கிளிநொச்சி)

இரணைமடுக் குளத்திலிருந்து விவசாயத்திற்குப் பயன்படும் நீருக்கு மேலதிகமாக வெளியேற்றப்படும் நீர் கொள்வனவினை யாழ்.குடிநீர்த் திட்டத்திற்கு ஏன் பயன்படுத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கோரிக்கை முன் வைத்தார்.

நேற்று நடைபெற்ற 15

### நெல்லியடியில்
## விபரீத முடிவெடுத்தவர் உயிரிழப்பு

(கரணவாய்)

நெல்லியடி வதிரியில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அதே 15

### கிளிநொச்சி அபிவிருத்திக் கூட்டங்களுக்கு
## ஊடகங்களுக்கு இனி அனுமதியில்லை

(கிளிநொச்சி)

இனிமேல் ஊடகவியலாளர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அனுமதி இல்லை என யாழ். கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி 15

### தொண்டைமானாறில்
## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த ஆறு... 15

### கடும் சளி, காய்ச்சல்
## 3 மாத ஆண் குழந்தை தெல்லிப்பழையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடும் சளி, காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் மூன்று மாத ஆண் குழந்தை ஒன்று நேற்று மரணமடைந்துள்ளது.

தெல்லிப்பழை பன்னாலைப் பகுதியைச் சேர்ந்த பங்கஜன் ஸ்ரீதிகன் என்ற ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு கடந்த 24ஆம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# திருமறைக் கலாமன்றத்தின் கலைமுகம் இதழ் வெளியீடு



திருமறைக் கலாமன்றத்தின் கலை இலக்கிய சமூக இதழாகிய கலைமுகம் அரையாண்டுதழின் 78 வது இதழ் வெளியாகியுள்ளது.

திருமறைக் கலாமன்றம் தனது வைர விழாவினை 03.12.2024 - 03.12.2025 காலப்பகுதியில் கொண்டாடும் சிறப்புமிகு தருணத்தில் இவ்விதழ் வெளியாகின்றமை விசேட அம்சமாகும்.

இம்முறை கலைமுகம் தன் வாசகர்களுக்காக கட்டுரைகள், கவிதைகள், சிறு கதைகள், நூல் மதிப்பீடுகள், பத்திகள் என்பனவற்றினைத் தாங்கிய வண்ணம் வெளியாகியுள்ளது. (ம-7)

# பிரதமர் ஹரிணிக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

பிரதமர் ஹரிணிஅமரசூரியவுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ருஹுணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேன இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

ருஹுணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில், அரசியல் தேவை காரணமாகவே தான் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

துணைவேந்தர் பதவிக்குத் தகுதியான அதிகாரியை நியமிப்பதில் நடைமுறை மீறப்பட்டுள்ளதாகவும், இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்றும் அவர் கூறுகிறார்.

இதற்குக் கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, உயர் கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆகியோர் பொறுப்புக்கூற வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# ஊடகவியலாளர் மீது கிளிநொச்சியில் தாக்குதல்

*(கிளிநொச்சி)*

கிளிநொச்சி ஏ- 9 வீதியில் வைத்து ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வன் மீது தாக்குதலை மேற்கொண்ட இனந் தெரியாத நபர்கள் அவரைக் கடத்த முயற்சி செய்துள்ளனர்.

அலுவலகத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில், கறுப்பு வானில் வந்த இனந்தெரியாதவர்கள் தன்னைத் தாக்கி வானுக்குள் ஏற்றிக் கடத்த முயன்றதாகவும் தான் அங்கிருந்து தப்பியுள்ளதாகவும் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர் தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

கடும் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வன் பொலிஸில் முறைப்பாடளித்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7,33)

# மகிந்த மீது தாக்குதல் உண்மைக்குப் புறம்பானது

## பிரதி அமைச்சர் சுனில் வடகல

அரச புலனாய்வுப் பிரிவின் கருத்துக்களுக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மீது தாக்குதல் நடத்தப்படும் என வெளியாகிய செய்தி உண்மைக்குப் புறம்பானது எனப் பொதுப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலில் இதனைக் கூறியுள்ளார்.

அவ்வாறு பிரச்சினைகள் குறித்த தகவல்கள் உறுதி செய்யப்பட்டால் பாதுகாப்பு நிலைமையினைக்கருதி தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வாய்ப்புள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்,


"மகிந்த ராஜபக்ஷவின் மீது ஆளில்லா விமானத் தாக்குதல் நடந்ததாக மனோஜ் கமகே கூறியிருந்தார்.

இப்போது பொலிஸ் மா அதிபர் அவரை விசாரிக்கத் தயாராகிவிட்டார்.

மனோஜ் கமகே கூறும் விடயங்கள் ஒட்டுமொத்த சமூகத்தையும் வழிதவறும் செயற்பாட்டுக்குக் கொண்டு செல்லும்" என்றார். (ம-7)

# இலங்கை வடிவிலான ஆபூர்வ இரத்தினக்கல்

*(இரத்தினபுரி)*



இலங்கையின் வடிவிலான அரிய இயற்கை நீலக்கல் ஒன்றை வர்த்தகர் ஒருவர் கொள்வனவு செய்ததாக அறிவித்துள்ளார்.

இரத்தினபுரி நிவித்திகல பிரதேசத்தைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கொள்வனவு செய்துள்ளார்.

நீல இரத்தினக்கல்லை கரவிட்ட இரத்தினக்கல் சேகரிக்கும் ஒருவரிடம் கொள்வனவு செய்ததாக வர்த்தகர் ரொஹான் வசந்த தெரிவித்துள்ளார்.

குறித்த இரத்தினக்கல்லில் இலங்கையின் நிலத்திட்டத்தையும் யாழ். குடாநாடு எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் பார்க்கலாம்.

மன்னார், திருகோணமலை உட்பட இலங்கையின் நான்கு திசைகளும் அதில் காட்சியளிக்கின்றன.

இரத்தினம் மற்றும் நகைகள் ஆணையத்திடம் குறித்த இரத்தினக்கல் சமர்ப்பிக்கப்பட்டு, கடந்த 24ஆம் திகதியன்று அடையாள சோதனை அறிக்கை பெறப்பட்டது.

இந்த இரத்தினக்கல் இயற்கையான கொருண்டம் இனத்தைச் சேர்ந்ததென குறிப்பிடப்படுகின்றது. (ம-7)

# 7,950 வாகன சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட போக்குவரத்து நடவடிக்கைக்கு அமைய வியாழக்கிழமை (26) காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேர காலப்பகுதியில் மாத்திரம் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 395 சாரதிகள் உள்ளடங்கலாக 7950 சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய கடந்த 20ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் விசேட போக்குவரத்து நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரக் காலப் பகுதியில் மாத்திரம் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 395 சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கவனக்குறைவாகவும் அபாயகரமாகவும் வாகனம் செலுத்திய 50 சாரதிகள், அதிக வேகத்தில் வாகனம் செலுத்திய 120 சாரதிகள், விதிமீறல்களில் ஈடுபட்ட 1,262 சாரதிகள், அனுமதிப்பத்திர உரிமைமீறல் தொடர்பில் 682 சாரதிகள் மற்றும் ஏனைய போக்குவரத்து விதிமீறல்களுடன் தொடர்புடைய 5,441 சாரதிகள் உள்ளடங்கலாக 7,950 சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக 25 ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரத்துக்கு இடைப்பட்ட தொகையில் தண்டப்பணம் விதிக்கப்படுவதுடன் அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் 12 மாதங்களுக்கு இடைநிறுத்தப்படும்.

மேலும் பொதுப்போக்குவரத்து வாகன சாரதிகள் மேற்படி குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்படும் பட்சத்தில் அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என்பதையும்கவனத்தில் கொள்வது அவசியம் என்றார். (ம-7)


இப்பொழுது யாழ்ப்பாணத்தில்!

SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | |
|---|---|---|---|
| எயார் ப்ரெஷ்னர் | 4L | ~~3000~~ | 1000 |
| கண்ணாடி கிளீனர் | 4L | ~~1500~~ | 850 |
| கல்சியம் நீக்கி | 4L | ~~1400~~ | 850 |
| சலவைத் திரவம் | 4L | ~~2000~~ | 950 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~1400~~ | 850 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1300~~ | 750 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~1400~~ | 850 |
| ஹானட் வோஷ் | 4L | ~~2000~~ | 1000 |

100g டிஷ் வோஷ் சோப் 2 கட்டி ரூ 100

விசேட விலைக் கழிவு

(2856)

NO.576/2C, Siyambalape road, Helyanthuduwa, makola, Reg No.PV00240433

288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 021 222 0866, 077 496 494

ஆங்கிலமொழி மூல தனிப்பட்ட, குழு வகுப்புகள்

2026 A/L - இணைந்த கணிதம்

தரம் 9,10,11 - கணிதம்

யாழ். நகரிலிருந்து 5 Km இற்கு உட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 313 1170

(2853)


## 3 மாத ஆண்...

தேதி கடும் சளி மற்றும் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது இருப்பினும் நேற்று முன்தினம் காலை குழந்தை சுவாசிக்க சிரமப்பட்டதன் காரணத்தினால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

குழந்தையின் மரணம் தொடர்பிலான மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுனாமி பேரவல நினைவேந்தல்



















**சுனாமி ஆழிப்பேரலை இடம்பெற்று நேற்றுடன் 20 ஆண்டுகள் நிறைவடைவதை நினைவு கூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மக்கள் தமது அஞ்சலியை செலுத்தினர்.**

**உயிரிழந்த உறவுகளின் திருஉருவப்படத்திற்கு மலர்தூவப்பட்டு, சுடரேற்றப்பட்டதுடன், ஆழிப்பேரலையினால் காவுகொள்ளப்பட்டவர்களின் உறவினர்கள் கதறி அழுது, கண்ணீர் சொரிந்து தமது அஞ்சலிகளை உணர்வெழுச்சியுடன் மேற்கொண்டனர்.**

**(நி-6-8-60-250-285-299)**

# கச்சதீவு தொடர்பில்
## இந்தியாவுடன் பேச வேண்டியதில்லை
## சரத்வீர சேகர அழுத்தம்



(கொழும்பு)

இலங்கையின் தேசிய பாதுகாப்பின் பிரதான ஒரு அம்சமாக கச்சதீவு காணப்படுகிறது. கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது. இவ்விடயத்தில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அவசியமற்றது. இந்தியாவின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அடிபணிய வேண்டிய தேவை கிடையாதென முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக கச்சதீவை மீட்க வேண்டும் என இந்தியாவின் திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் ஒன்றை அண்மையில் நிறைவேற்றியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, கச்சதீவு விவகாரத்தை இந்திய அரசாங்கம் அரசியல் பிரசாரத்துக்காகவே பயன்படுத்திக் கொள்கிறது. இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் சென்று சட்ட விரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை. இந்திய மீனவர்கள் தான் இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் உள்நுழைந்து கடல் வளத்தையும், மீன் வளத்தையும் நாசம் செய்கிறார்கள். இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிப்பதை தடுப்பதற்கு இந்திய மத்திய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்விடயத்தில் இந்திய அரசாங்கம் மந்தகதியில் தான் செயற்படுகிறது.

கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது. இவ்விடயம் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டிய அவசியம் கிடையாது. இலங்கை இவ்விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் இருக்க வேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவிப்பதும் பிற்காலத்தில் பல நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதற்கு காரணியாக அமையும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் பல விடயங்களை உணர்த்தியுள்ளது.

அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தம் முழுமையாக [illegible] வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்ற நிலையில் அதன் அம்சங்களின் பிரதான ஒன்றாக கருதப்படும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக இந்தியாவுக்கு வாக்குறுதியளித்துள்ளமை தவறானதொரு செயற்பாடாகும்.

புதிய அரசியலமைப்பு ஊடாக சமஷ்டியாட்சி முறைமையின் அம்சங்களை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

எக் காரணிகளுக்காகவும் சமஷ்டியாட்சி முறைமையை உருவாக்க இடமளிக்க போவதில்லை என்பதை அரசாங்கத்துக்கு தெரிவித்துக்கொள்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

## அரிசி இறக்குமதிக்கான தடை நீக்கம் சுங்கத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு))

இடைநிறுத்தப்பட்டிருந்த அரிசி இறக்குமதிக்கான அனுமதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோசமான வானிலையால் நாட்டில் நிலவும் அரிசி தட்டுப் பாட்டுக்குத் தீர்வாக கடந்த டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையில் தனியார் துறை வர்த்தகர்களுக்கு நேரடியாக அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அக்காலப் பகுதியில் மொத்தமாக 67,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

எவ்வாறெனினும், அண்மையில் நடைபெற்ற அமைச்சரவையில் அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் ஜனவரி 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டதுடன் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 24 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இதன்படி நேற்று முதல் அரிசி இறக்குமதிக்கான தடை நீக்கப் பட்டுள்ளதாக சுங்கத் திணைக் களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, அரச வர்த்தக பல்வேறு சட்டமூலக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 780 மெற்றிக் தொன் அரிசியின் முதலாவது தொகுதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன குறிப்பிட்டார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்போர்ன் டெஸ்ட் முதல்நாள் முடிவில் 311 ரன்கள் குவித்த ஆஸி




அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி பார்டர்-கவாஸ்கர் கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் பெர்த்தில் நடந்த முதலாவது டெஸ்டில் இந்தியாவும், அடிலெய்டில் அவுஸ்திரேலியாவும் வென்று 1-1 என சமநிலை வகிக்கிறது. பிரிஸ்பேனில் நடந்த 3 ஆவது டெஸ்ட் டிராவில் முடிந்தது.

இந்நிலையில் இந்தியா-அவுஸ்திரேலியா இடையிலான 4 ஆவது டெஸ்ட் மெல்போர்னில் நேற்று ஆரம்பமானது. இப்போட்டியில் டாஸ் வென்ற அவுஸ்திரேலிய அணியின் கப்டன் பட் கம்மின்ஸ் பட்டிங் தேர்வு செய்தார்.

அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக அறிமுக வீரர் சாம் கான்ஸ்டாஸ் உடன் கவாஜா களமிறங்கினர். இதில் அதிரடியாக விளையாடிய கான்ஸ்டாஸ் 65 பந்துகளில் 60 ரன்கள் அடித்து ஜடேஜா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இப்போட்டியின் மூலம் அறிமுகமான 19 வயது இளம் வீரர் சாம் கான்ஸ்டாஸ் பும்ராவின் ஓவரில் 2 சிக்சர்களை பறக்கவிட்டார். இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் பும்ராவிற்கு எதிராக குறிப்பாக 4,483 பந்துகளுக்கு பிறகு சிக்சர் அடித்த வீரராக மாறி சாதனை படைத்தார்.

நிதானமாக விளையாடிய மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் கவாஜா 57 ரன்களில் பும்ரா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து களமிறங்கிய மார்னஸ் லாபுசாக்னே 72 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய டிராவிஸ் ஹெட், பும்ரா பந்துவீச்சில் டக் அவுட்டாகி வெளியேறினார். மிட்சல் மார்ஸ் 4 ரன்களிலும் அலெக்ஸ் கேரி 31 ரன்களையும் ஆட்டமிழந்தனர்.

இறுதியாக முதல் நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 311 ரன்களை குவித்துள்ளது. நிதானமாக விளையாடி அரைசதம் கடந்த ஸ்மித் 68 ரன்களுடனும் பட் கம்மின்ஸ் 8 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

இந்திய அணி தரப்பில் பும்ரா 3 விக்கெட்டுகளும் ஜடேஜா. ஆகாஷ் தீப், வோஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா 1 விக்கெட்டும் வீழ்த்தினர். (6-8)

# கிறிஸ்மஸ் தாத்தாவாக மாறிய எம்.எஸ்.தோனி



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் எம்.எஸ்.தோனி கிறிஸ்மஸ் தாத்தாவாக மாறிய புகைப்படம் வைரலாகியுள்ளது.

உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் பண்டிகை நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் உட்பட பலரும் கிறிஸ்மஸ் பண்டிகை வாழ்த்துக்களை தெரிவித்திருந்தனர்.

அந்தவகையில், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனும், ஐபிஎல் சென்னை சூப்பர் கிங்க்ஸ் அணியின் வீரருமான எம்.எஸ்.தோனி தனது குடும்பத்துடன் கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடியுள்ளார். அப்போது அவர் கிறிஸ்மஸ் தாத்தா வேடம் அணிந்து தனது மனைவி மற்றும் மகளுடன் பண்டிகையை கொண்டாடியுள்ளார். இது தொடர்பான புகைப்படங்களை அவரது மனைவி சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார்.

அத்தோடு, சென்னை சூப்பர் கிங்க்ஸ் அணியும் தனது டுவிட்டர் எக்ஸ் தளத்தில், எம்.எஸ்.தோனி கிறிஸ்மஸ் தாத்தா வேடமணிந்த புகைப்படத்தை பகிர்ந்து santa Class என பதிவிட்டுள்ளது. (6-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3283

### தயாளன்

புருசனை போட்டு மாட்டை அடிக்கிற மாதிரி அடித்து மண்டைய உடைச்சு வைத்தியரிடம் ஊசி போடும் போது



வைத்தியரைப் பார்த்து அவர் வலி தாங்க மாட்டார் என்று சொல்லுறா பாரு அவ தான்யா பொண

### ராகவி

நேற்று அவன் தான்டா லீவு போட்டான் நீயும் ஏன்டா வரவில்லை...




நான் வந்தா அவனுடைய வேலையையும் என்னையே பார்க்க சொல்லுவீங்கள்

### டான்சி

கல்யாணம் ஆகி ஒரு மாசம் கூட ஆகவில்லை ஆனால் கோபப்படுறாள் அடிக்க வாறாள்.




ஆரம்பத்தில அப்படி தான் இருக்கும் அப்புறம் அப்புறம் அதுவா பழகிடும்

### கஜன்

வாங்க நீங்கள் யாரு புது பிரச்சினையா?




வந்து டோக்கன் போட்டு லைனில நில்லுங்க ஏற்கனவே இங்கு பல பிரச்சினைகள் ஓடிட்டு இருக்கு

### தனுஷியா

கணவன்: ஊரெங்கும் ஒரே காய்ச்சலா இருக்கு குடிக்க வெந்நீர் கொடு

மனைவி: ஏன் இப்படி பயப்படுறீங்கள்? மூளைக்காய்ச்சல் தான் பரவுது! அது எப்படி உங்களுக்கு வரும்.



### ஜோன்

2025 இல் தான் என் வாழ்க்கை பிரகாசமாக இருக்கப் போகுது




இதுல மட்டும் எப்படி பிரகாசமாக இருக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இவ்வருடத்தின் ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 1,966,256 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, டிசம்பர் மாதத்தின் முதல் 22 நாட்களில் 161,383 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 35,131 ஆகும்.

மேலும், ரஷ்யாவிலிருந்து 22,637 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 12,822 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 9,998 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 8,646 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 6,998 சுற்றுலாப் பயணிகளும், அமெரிக்காவிலிருந்து 5,009 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-8)


**லங்கா மஹரால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
**077 839 3974**


# மதுபோதையில் சாரத்தியம் 395 சாரதிகள் கைது

(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் செலுத்திய 395 சாரதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த அனைவரும் நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய, இந்த போக்குவரத்து நடவடிக்கைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்படி, மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் உட்பட ஏனைய போக்குவரத்து சட்டங்களை மீறும் சாரதிகளையும் கைது செய்யும் நடவடிக்கை தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# அடுத்த ஆண்டு முதல் மலிவு விலையில் பயிற்சிப் புத்தகங்கள்

## அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து பாடசாலைப் பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்களை மலிவு விலையில் சந்தைக்கு வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையை நேற்று முன்தினம் பார்வையிடும் போது கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் மூலம் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து கழிவு காகிதங்கள் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்து பயிற்சி புத்தகங்கள் மற்றும் எழுது பொருட்கள் மலிவு விலையில் சந்தைக்கு வெளியிட எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய கடதாசி கூட்டுத்தாபனமும் பல வருடங்களாக நலிவடைந்து வரும் விதம் தனது கண்காணிப்பு பயணத்தின் போது காணப்பட்டதாகவும், இதுவரையில் இருந்த குறைபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு புதிய பணியாளர்கள் ஆற்றலுடன் பணியாற்ற முயற்சிப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (நி-8)


**கண்ணீர் அஞ்சலி**



அமரர். **தர்மலிங்கம் பரராசசிங்கம்**

25.12.2024 அன்று இறைபதம் அடைந்த எமது பாலர் பகல் விடுதியின் முன்னை நாள் நிர்வாகசபை உறுப்பினர் அமரர். **தர்மலிங்கம் பரராசசிங்கம்** அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(2845)

நிர்வாகத்தினர், பாலர் பகல்விடுதியும் முன்பள்ளியும், நீர்வேலி.



**நீங்காத நினைவுகளுடன் 8 ஆம் ஆண்டு**

அமரர். செல்வி.
**கணேசலிங்கம் ஹம்சுஜா**

அன்னை மடியில்- 08.05.1992
ஆண்டவன் அடியில் -27.12.2016

எம்மால் தொட்டு விட முடியாத
தூரமதில் ஏனம்மா எம்மை
விட்டுச் சென்றாய்
ஆண்டாண்டு காலம் சென்றாலும்
ஆயுள் உள்ளவரை உன் நினைவு
எம்மை விட்டு அகலாது



பேக்கரி வீதி,
புத்தூர் கிழக்கு புத்தூர்.

(சி-1894) குடும்பத்தினர்.


# இராசிபலன்

27.12.2024
மார்கழி 12, வெள்ளிக்கிழமை
துவாதசி பின்னிரவு 2.32 மணிவரை

விசாகம் முன்னிரவு 8.53 மணிவரை
சுபநேரம் -6.27-7.57 மணிவரை
இராகுகாலம்-10.57-12.27 மணிவரை

சந்திராஷ்டமம்
உத்தரட்டாதி,ரேவதி

**வளவன்**

**மேஷம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்:** கரைந்த சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், நினைத்தது நிறைவேறி நிம்மதிகாணும் நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்,கௌரவமான நாள்.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் ஏற்படும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கடகம்:** மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** பணத் தேவைகள் பூர்த்தியாகும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கள் அகலும், பயணங்களால் பலனுண்டு, காரிய வெற்றிக்கு கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், சேமிப்பு உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு:** குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பொருளாதார நிலையில் ஏற்றம் காணும் நாள்.

**மகரம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், வீண் பழிகள் அகலும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலன் சீராகும்.

**மீனம்:** சுணங்கிய காரியங்களில் மாலை நேரம் முன்னேற்றம் காணலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், திடீர் விரயங்கள் ஏற்படும் நாள், திருடர் பயமுண்டு.

அருமை தெரியாதவன் வீட்டுக்குப் போனால் பெருமை குறைந்து போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழ்வுக்கு அனுமதி ரத்து

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(தருமபுரம்)

**பூநகரி - கௌதாரிமுனையில் மண் அகழ்வுக்கு அனுமதி கொடுக்க வேண்டாம் என யாழ்- கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திர சேகரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கௌதாரிமுனை ஒரு முக்கியமான பிரதேசம். அந்த இடம் சம்பந்தமாக உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும். அதனை பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது.

எனவே அனுமதி கொடுக்கப்பட வேண்டாம் என்பது இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் தீர்மானம். இந்த முடிவுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா இன்று தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டது என்பதற்காக இதற்கு முந்தைய நாளான 24ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி கொடுக்கப்பட்டது போல திகதியிட்டும் அனுமதி கொடுக்கப்பட கூடாது என்றும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன், இராமநாதன் அர்ச்சுனா, ரஜீவன், இளங்குமரன், பவானந்தராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (6-8-316)

# யாழ். பல்கலையில் மார்கழி இசை விழா

## 1 ஆம் நாள் அரங்க நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு கலைக் கூடல் மற்றும் யாழ். வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசை விழா -2024 1 ஆம் நாள் அரங்க நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலா சபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பி.ப 5 மணிக்கு மங்கல விளக்கேற்றல், திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நெறியாள்கையில் இந்தியன் கோர் னர், இசைப்பிரிவு மாணவர்கள் நிகழ்த்தும் தமிழ்த் தாய் வாழ்த் தும், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடல் இணைத் தலைவர் இ. இளங்கோவன் திருநிறை வழங்க லும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து பி.ப 5.30- இரவு 9.30 மணிவரை யாழ். மண்ணின் புகழ்பூத்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசைச்சங்கமம், யாழ்.பல்கலைக் கழக இசைத்துறை மாணவர்களின் "தமிழ் இசை அரங்கு", யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்" இலக்கிய நாடகம், யாழ்.பல்கலைக் கழக நடனத் துறை மாணவர்களின் "தேவன் எங்கே" நாட்டிய நாடகம் மற்றும் பேராசிரியர் சி.மௌன குரு நெறியாள்கையில் டவர் தமிழ் நாடகப் பாடசாலை மாணவர் களது "இராவணேசன்"(வட மோடி நாடகம்) போன்ற அரங்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (6-8)

# மாவட்டப் பண்பாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பண்பாட்டுப் பேரவையும் மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட பண்பாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகாமையில் உள்ள மகா மாரியம்மன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டச் செயலாளரும் பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான ம.பிரதீபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட ஓய்வு நிலை அரசாங்க அதிபர் செ. பத்மநாதன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் மற்றும் ஓய்வு நிலை பிரதிக் கல்வி பணிப்பாளரும் . பன்னாட்டு ஆடற்கலை ஆற்றுகையாளருமான வேல். ஆனந்தன், கௌரவ விருந்தினர்களாக மாவட்டச் செயலக ஓய்வு நிலை பிரதம கணக்காளர் சு. சண்முகரத்தினம் மற்றும் நல்லூர் பிரதேச செயலக ஓய்வு நிலை கலாசார உத்தியோகத்தர் திருமதி. ரஜனி குமாரசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதுடன் "யாழ்.முத்து" , "இளங்கலைஞர்" போன்ற விருதுகளும் வழங்கி வைக்கப்படவுள்ளது. (6-8)

# அபிவிருத்திக்குழுக் கூட்டம் புறக்கணித்த தமிழ் எம்.பிகள்

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

செட்டிகுளம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில், செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட காணிப் பிரச்சனைகள், சுகாதார வைத்திய சேவை, கல்வி, பொருளாதார அபிவிருத்தி, மேச்சல் தரை, விவசாயம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் வருகை தந்த கிராம மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முத்து முகமது, பிரதேச செயலாளர் திருமதி சுலோஜனா மற்றும் அரச அதிகாரிகள், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை குறித்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ப. சத்தியலிங்கம், காதர் மஸ்தான் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-8-250)

# சிறுமி கொலை விவகார வழக்கு

## கைதான நபர் மறியலில்

(மன்னார்)

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 10 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 55 வயதுடைய நபரை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டது.

சம்பவம் தொடர்பில் கைதான நபரை தலை மன்னார் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்ததன் பின்னர் குறித்த நபரை நேற்று விசாரணைக்காக மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த நபரை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (6-8-285)

# மதுபானசாலை அனுமதிப்பத்திர அறிக்கை தயாரிக்க குழு நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மதுபான சாலை அனுமதிப்பத்திர அமைவிடம் தொடர்பில் அறிக்கை ஒன்றைத் தயாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன் போதே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நகர திட்டமிடலுக்கு இடையூறாகவும் அதிகளவிலும் மதுபான. நிலையங்கள் திறக்கப்பட்டு மக்களிற்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவால் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் சிபாரிசு வழங்கியவர்களின் விடயத்தை வெளியிட வேண்டும் எனவும், மதுபான சாலை அனுமதிகளுக்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த பட்டியல் விரைவில் வெளியிடப்படும் எனவும், மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டால் மாத்திரமே குறித்த விடயத்தை கையாள முடியும் எனவும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்திருந்தார்.

மதுபான நிலையங்களை உடனடியாக மூடுவதெனில் சட்ட சிக்கல்கள் ஏற்படும். ஆகவே அது தொடர்பில் அறிக்கை தயாரிக்க வேண்டும் என மாவட்ட அரசாங்க அதிபர் முரளிதரன் தெரிவித்தார். இந்த விடயத்தை ஆராய்வதற்கு குழு ஒன்றை அமைக்க தான் முன்மொழிவதாக சிறிதரன் தெரிவித்தார். அதனை அர்ச்சுனா வழி மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-100)



வலி.கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருட காலம் சேவைகளை பூர்த்தி செய்த பணியாளர்களினது கௌரவிப்பும், 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களது பிள்ளைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் கூட்டுறவு நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு-பிரதமர் நம்பிக்கை

(கொழும்பு)

**தேசிய மக்கள் சக்தி அரசு, மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் மக்களால் நிறுவப் பட்ட அரசு. இது எவராலும் அசைக்க முடியாதது. எனவே, இந்த அரசு கவிழும் என்று எதிரணி யினர் கனவில் கூட நினைக்கக் கூடாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசு மீது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிர் கட்சியினர் முன்வைத்து வரும் விமர்சனங்கள் தொடர்பில் ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் ஹரிணி அமரசூரிய மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பினார்கள். அந்த மக்களே எம்மை ஆட்சிக்குக் கொண்டு வந்துள்ளார்கள். மக்கள் ஆணைக்கு மதிப்பளித்துச் செயற்படுவது எமது பிரதான கடமை. மக்களுக்கு நாம் வழங்கிய வாக்கு றுதிகளை நிறைவேற்றுவது எமது பிரதான குறிக்கோள்.

ஆளும் தரப்பினரின் கல்வித் தகைமை பற்றி கேள்வி எழுப்பும் எதிர் கட்சியினர் முதலில் தங்கள் கல்வித் தகைமையைப் பரிசோதிக்க வேண்டும். பொய்களைச் சொல்லி நாம் ஆட்சிக்கு வர வில்லை.

நாம் நேர்மையுடன் நடந்தபடியால் தான் மக்கள் எம்மை ஆட்சியில் அமர்த் தியுள்ளார்கள். மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்போம். இனிமேல் இன, மத, மொழி ரீதியில் பிரச்சினைகள் வர இடமளியோம்" என குறிப்பிட்டுள்ளார். (ந்-8)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 15 1/2
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Computer Science Engineering, Software Engineer.
எதிர்பார்ப்பு : அரச/தனியார் Degree.
தொ.இ: B/15032.

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L, Wiring (Own)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்.
தொ.இ: B/15033

பிறப்பு:1975 இந்து
நட்சத்திரம்: கேட்டை
12 இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L Shop (Own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15035

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு : 1998 இந்து
நட்சத்திரம்: மகம்
7 இல் செவ்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Psychological (UK Uni. (PVT) NHS (Gov.)
எதிர்பார்ப்பு: UK Only.
தொ.இ: G/15031

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 39 1/4
உயரம்: 5'9"
தகைமை/தொழில் : Administration Assistant (Swiss)
எதிர்பார்ப்பு : Degree, உத்தியோகம்.
தொ.இ: G/15034

பிறப்பு : 1997 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 32
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Engineer, London.
எதிர்பார்ப்பு : Degree London.
தொ.இ: G/15043

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

# UNIVERSITY OF JAFFNA SRILANKA VACANCIES

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned post up to **13.01.2025**

**Post of Temporary Research Assistants / Temporary Scientific Assistants "Lee Foundation Endowment for Orthopaedic Surgery - Professorial Surgical Unit Faculty of Medicine, University of Jaffna"**

| Post | Salary scale |
|---|---|
| **Temporary Research Assistants** | **Rs.49,860/- (Fixed) pm** |

Qualifications:-

1. Pre intern medical officers :
Those who have completed the Final MBBS Examination.
*Selection will be based on the order of Merit list.*

2. Para-Medical or Science based qualified graduates :
I. A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.
OR
II. A Second class (Lower Division) in a Special Degree Examination in the relevant field.
OR
III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant field.

**AND**

The graduates those who have an excellent track record on under undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills.

| Post | Salary scale |
|---|---|
| **Temporary Scientific Assistants** | **Rs.48,385 / - (fixed) pm** |

Qualifications:-

1. Para-Medical or Science based qualified graduates :
I. A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.
OR
II. A Second Class (Lower Division) in a Special Degree Examination in the relevant field.
OR
III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant field.
OR
IV. An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant field.

**Note:** Having an excellent track record on undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills will be given priority.

Perfected applications shall be sent to the **Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.**

Application forms will be available in the University website Application Form. Those who wish to send the application forms downloaded from the University website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs. 100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880**(*Ref number should be mentioned:* 970000090000387) of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs. 100 / - per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self - addressed stamped envelope 23x10 cm in size along with the paid Bank Slip to the above address. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.


**REGISTRAR** (c-1896)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ட்ரம்பின் அச்சுறுத்தலால்

# கிறீன்லாந்தின் பாதுகாப்பை பலப்படுத்துகின்றது டென்மார்க்





(டென்மாரக்)

கிறீன்லாந்தினை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது குறித்து ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ரம்ப் கருத்து வெளியிட்டுள்ளதை தொடர்ந்து டென்மார்க், கிறீன்லாந்திற்கான பாதுகாப்பை அதிகரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

கிறீன்லாந்தின் பாதுகாப்பிற்கான நிதிஒதுக்கீட்டில் அதிகரிப்பை செய்யவுள்ளதாக டென்மார்க் அறிவித்துள்ளது.

டென்மார்க் பிரதமர் ட்ரோல்ஸ் லண்ட் பால்சன் இதனை அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை வெளியிட வேண்டிய தருணத்தை விதியின் முரண்நகைச் சுவை என அவர் வர் ணித்துள்ளார்.

கிறீன்லாந்தின் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்படும் நிதியை பயன்படுத்தி இரண்டு கண்காணிப்பு கப்பல்களையும், இரண்டு நீண்ட தூர ஆளில்லா விமானங்களையும் கொள்வனவு செய்ய முடியும் என கிறீன்லாந்து பிரதமர் தெரிவித்துள்ளார்.

டென்மார்க்கின் தன்னாட்சி பிரதேசமான கிறீன்லாந்தில் அமெரிக்காவின் விண்வெளித் தளமொன்று காணப்படுகின்றது.

மேலும் வடஅமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்கு செல்வதற்கான குறுகிய பாதையில் அமைந்துள்ளதால் கிறீன்லாந்து அமெரிக்காவிற்கு மூலோபாய அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இங்கு பெரும் கனிமவளங்கள் காணப்படுகின்றன.

உலகின் பெரிய தீவுகளில் ஒன்றான கிறீன்லாந்தை பாதுகாப்பு காரணங்களிற்காக அமெரிக்கா தன்னுடன் இணைத்துக் கொள்ளும் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ள நிலையிலேயே கிறீன்லாந்து பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிறீன்லாந்து எங்களுடையது, நாங்கள் விற்பனைக்குரியவர்கள் இல்லை, ஒரு போதும் அது இடம் பெறாது என பிரதமர் மியுட் எகிட் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக டென்மார்க்கிற்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் நியமனம் குறித்து விடுத்த அறிக்கையில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் தேசிய பாதுகாப்பு மற்றும் உலகம் முழுவதும் சுதந்திரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கிறீன்லாந்தின் உரிமை தன்னிடம் இருப்பது அவசியம் என அமெரிக்கா கருதுகின்றது என குறிப்பிட்டிருந்தார்.

2019 இல் டென்மார்க், கிறீன்லாந்து விற்பனைக்கில்லை என தெரிவித்ததைத் தொடர்ந்து ட்ரம்ப் அந்த நாட்டிற்கான விஜயத்தை இரத்துச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# விண்வெளியில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்



(வோஷிங்டன்)

சர்வதேச விண்வெளி நிலையத்தில் பணியாற்றி வரும் நாசா விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர், சண்டா தொப்பிகள் அணிந்து கிறிஸ்மஸைக் கொண்டாடிய நிகழ்வு சமூக ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாசா வெளியிட்ட காணொளியில், சுனிதா வில்லியம்ஸ் சிவப்பு சட்டை அணிந்திருப்பதையும், மற்ற வீர்ர்கள் சண்டா தொப்பிகளுடன் கிறிஸ்மஸ் உற்சாகத்தில் ஈடுபட்டிருப்பதையும் காணமுடிகிறது.

அதேவேளை, இந்தக் காணொளி பலரிடையே கேள்விகளை எழுப்பியுள்ளது.

8 நாள் பயணமாகக் கடந்த ஜூன் 5 ஆம் திகதி விண்வெளிக்கு அனுப்பப்பட்ட இந்த வீரர்கள், தொழில்நுட்பக் கோளாறு காரணமாகப் பல மாதங்களாக அங்கேயே தங்கியுள்ளனர்.

அவர்களை மீண்டும் பூமிக்கு அழைத்துவர நாசா அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தான் நடவடிக்கை எடுக்கும் என்று கூறியுள்ளது.

8 நாள் பயணத்துக்குத் திட்டமிட்ட நாசா அவர்கள் விண்வெளியில் சிக்குவார்கள் என்று தெரிந்தே டிசம்பரில் வரும் கிறிஸ்மஸ்க்கு தேவையான அலங்கார மரம், சண்டா தொப்பி உள்ளிட்டவற்றைக் கொடுத்து அனுப்பியது எப்படி என்ற கேள்வியைப் பலர் முன்வைக்கின்றனர்.

இந்நிலையில் அந்தக் காணொளிக்கான விளக்கத்தை நாசா வழங்கியுள்ளது.

நாசாவின் தகவலின்படி நவம்பரில் ஸ்பேஸ்எக்ஸ் விண்கலம் மூலமாகச் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு மூன்று தொன் பொருட்கள் அனுப்பப்பட்டன.

இதில் கிறிஸ்மஸ் மரம், அலங்காரங்கள், பரிசுகள், வான்கோழி இறைச்சி, உருளைக் கிழங்கு, காய்கறிகள், பிஸ்கட் குக்கீகள் உள்ளிட்ட சிறப்பு உணவுப் பொருட்களும் இடம்பெற்றன.

மேலும், பணி சார்ந்த தொழில்நுட்ப பொருட்களும் அந்த விண்கலத்தில் அனுப்பப்பட்டதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிகழ்வு விண்வெளியில் இருந்தாலும் உற்சவங்களைக் கொண்டாடுவதற்கான மனித முயற்சியின் சிறந்த உதாரணமாகப் பார்க்கப்படுவதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-8)

# வெற்
# உக்ரை

## உறுதிபட

(வோஷிங்டன்)—
ரஷ்யாவின் ஆக்கி
பெறும் வரை அமெ
அமெரிக்க ஜனாதிபதி

உக்ரைனில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் களை கட்டிய நிலையில், அந் நாட்டின் எரிசக்தி கட்டமைப்புகளை குறிவைத்து ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் வாயிலாக ரஷ்யப் படையினர் தாக்குதல் நடத்தினர். இதற்கு, ரஷ்யாவிற்கு

அமெரி
பைடன்
வித்து
அவ
தில் 
வில் 
உக்ரை
கணை
உள்ள

## தேசிய பறவையாக

## 250 வருடங்களி
## அங்கீகரித்த அமெ



(வோஷிங்டன்)


அமெரிக்காவின் அதிகார பூர்வ தேசிய பறவையாக கழுகை தேர்தெடுப்பதற்கான மசோதாவில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட்டுள்ளார்.

1782
ருந்து அ
தேசிய சி
கழுகு,
ணங்கள்
முத்திரை
ளது.
எனினு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற்றி பெறும் வரை ...ரைனுக்கு உதவுவோம்

## ...படத் தெரிவித்தார் பைடன்



...ன்)

**... ஆக்கிரமிப்பிற்கு எதிரான போரில் உக்ரைன் வெற்றி ... அமெரிக்கா தொடர்ந்தும் உதவி செய்யும் என ...ாதிபதி ஜோ பைடன் உறுதியளித்துள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் சமூகவலை தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: உக்ரைனில் ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தி உள்ளது. இந்தத் தாக்குதலை கண்டிக்கிறேன். குளிர் காலத்தில் உக்ரைன் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கும் சூழலில், மின்சாரம் துண்டித்து தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது. நான் தெளிவாக சொல்கிறேன். உக்ரைன் மக்கள் அமைதி யாகவும், பாதுகாப்பாகவும் வாழ விரும்புகிறார்கள்.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக உக்ரைன் வெற்றி பெறும் வரை அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் உக்ரைனுடன் தொடர்ந்து நிற்க வேண்டும். உக்ரைனுக்கு அதிகமான ஆயுதங்கள் வழங்குமாறு பாதுகாப்புத் துறைக்கு உத்தரவிட்டுள்ளேன். ரஷ்யாவின் படைகளுக்கு எதிராக, உக்ரைன் மக்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

## ...யாக கழுகு

### ...களின் பின் ... அமெரிக்கா





1782 ஆம் ஆண்டிலி...ருந்து அமெரிக்காவின் தேசிய சின்னமாக உள்ள கழுகு, முக்கிய ஆவணங்களில் குத்தப்படும் முத்திரையாகவும் உள்ளது.

எனினும், அமெரிக்காவின் அதிகாரபூர்வ தேசிய பறவையாக கழுகு இது வரை அங்கீகரிக்கப்படிருக்க வில்லை.

இவ்வாறான பின்னணியில், கழுகை தேசிய பறவையாக அங்கீகரிக்கும் மசோதா ஒன்று கடந்த வாரம் காங்கிரஸால் முன் வைக்கப்பட்டு பைடனின் கையெழுத்துக்காக சமர்ப்பிக் கப்பட்டது.

இதனையடுத்து, கிறிஸ்மஸ்ஸின் முந்தைய நாள் கொண்டாட்டத்தினை முன்னிட்டு குறித்த மசோதாவில் பைடன் கையெழுத்திட்டுள்ளார்.

இந்நிலையில், 250 வருடங்களாக தேசிய பறவையாக கருதப்பட்ட கழுகு, தற்போது உத்தியோகபூர்வ மாகியுள்ளது என தேசிய பறவை முன்முயற்சியின் இணைத் தலைவர் ஜெக் டேவிஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## மொசாம்பிக் சிறைச்சாலையில் அமைதியின்மை-33 பேர் பலி


(மொசாம்பிக்)

மொசாம்பிக் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட அமைதியின்மையால் 33 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இதன்போது 1,534 பேர் சிறையிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. தப்பிச்சென்றவர்களில் 150 பேர்மீளக்கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அன்றைய தினத்தில் மொசாம்பிக்கின் 2 சிறைகளில் சிறை உடைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலையின் நினைவேந்தல் மாவட்டச் செயலகங்களில் அனுஷ்டிப்பு





(கிளிநொச்சி)

தேசிய பாதுகாப்பு தினமும் சுனாமி ஆழிப்பேரலையின் 20 ஆவது ஆண்டு நினைவு தினமும் நேற்று கிளிநொச்சி, வவுனியா மாவட்ட செயலகங்களில அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தேசியக்கொடி ஏற்றலுடன் சுனாமி மற்றும் ஏனைய அனர்த்தங்களால் உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரம், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ச.சிறீபவானந்தராஜா, இ.அர்ச்சுனா மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்-முரளீதரன், வட மாகாண அமைச்சுக்ளின் செயலாளர்கள் அரச அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

அதே வேளை வவுனியா மாவட்ட செயலகத்தில் சுனாமி பேரலையில் உயிர் நீத்தவர்களின் அஞ்சலி நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உயிரிழந்தவர்களிற்கு காலை 9.25 - 9.27 வரை இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதத்தலைவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளுடன் உயிரிழந்தவர்களுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (6-8-250-316)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 450 | 500-600 | 500 |
| உருளைக்கிழங்கு | 250 | 230 | 200 | 300 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 850-1000 | 1000 |
| தக்காளி | 450 | 600 | 400-500 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 150-180 | 200 |
| கோவா | 250 | 350 | 200 | 300 |
| கரட் | 200 | 280 | 250 | 300 |
| பூசணி | 200 | 200 | 200 | 250 |
| புடோல் | 250 | 250 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 380 | 200 |
| பாகற்காய் | 800 | 1200 | 900 | 1500 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 350 | 250-350 | 300 |
| லீக்ஸ் | 300 | 380 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 400 | 350 | 500 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700-800 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 300 | 400 | 500-600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | -- | 480 |
| கீரை - 1 பிடி | 160 | 120 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 300 | 400 | 400-500 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 80-155 | 150-200 |
| இராசவள்ளி | -- | 800 | 800 | 800 |
| வெங்காயப்பூ | 480 | 550 | -- | -- |
| முள்ளங்கி | 240 | 100 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 90 | 250 |

# இன்று ஒரு தகவல் 290



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## காலம் பொன்னானது

ஒரு அலுவலகர் தன்னுடைய அலுவலகத்தில் வேலை பார்க்கின்ற ஒரு பணியாளரைப் பார்த்து, ஏன்? 10 மணி வேலைக்கு நீ 11 மணிக்கு வருகிறாயே என்று கேட்டு இருக்கிறார்.

வீட்டிலே அசந்து தூங்கிப் போய் விட்டேன் சேர்! எழுந்து கொள்வதற்கு நேரமாகி விட்டது என்று சொன்னார் அவர். அடடா! நீ வீட்டிலே வேறு தூங்கிறீயா என்று ஆச்சரியமாய் கேட்டாராம் அந்த அலுவலகர்.

இது சகஜமா நாம் சந்திக்கும் ஒரு நிகழ்ச்சித்தான். இருந்தாலும் காலம் பொன்னானது கடமை கண்ணானது என்று அங்கங்கே கண்ணில் படுகிறது மாதிரி போர்ட் ஒன்று எழுதி மாட்டி வைத்திருக்கின்றோம் கண்ணைத் திறந்தாலே அந்த போர்ட் கண்ணிலே தெரியும்.

நமது கதையெல்லாம் நம்முடன் இருக்கட்டும். பெரியவர்கள் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களை நினைத்துப் பார்த்தால் அவர்கள் எல்லாம் எந்த அளவுக்கு காலத்தைப் பொன்னாகக் கருதி இருக்கின்றார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.

குஜராத் மக்கள் எல்லோரும் ஒரு தடவை காந்தியடிகளிடம் போய் எங்களுடைய ஊரிலே ஒரு மாநாடு நடத்த வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். அந்த மாநாட்டுக்கு நீங்கள் தான் வந்து தலைமை தாங்க வேண்டும் என்று பிரியமாக கேட்டுக் கொண்டார்கள்.

காந்தியடிகளும் சரி என்று ஒத்துக் கொண்டார். குஜராத்தில் கோத்ரா என்று ஒரு இடம். அங்கே தான் அந்த மாநாடு நடந்தது. சரியாக குறிப்பிட்ட நேரத்துக்கு அந்த மாநாட்டு பந்தலுக்கு போய் தன்னுடைய இடத்திலே உட்கார்ந்து விட்டார் காந்திஜி. ஆனால் அந்த மாநாட்டுலே பேச ஒப்புக்கொண்டிருந்த திலகர் அரைமணிநேரம் கழித்து வந்து சேர்ந்தார்.

ஆனால் திலகர் வந்து சேருவதற்குள் காந்திஜி குறிப்பிட்ட நேரத்திலே தன்னுடைய தலைமை உரையை ஆரம்பித்து விட்டார். அவர் பேசிக் கொண்டிருந்த சமயத்தில் தான் திலகர் தாமதமாக வருகின்றார் என்பதை தன்னுடைய பேச்சிலே குறிப்பிட்டார்.

இந்தியா சுதந்திரம் அடைவதிலே அரைமணி நேரம் காலதாமதம். ஆனால் அந்தப் பழி திலகரின் தலைமையில் தான் விழும். அவர் இன்றைக்கு அரை மணிநேரம் தாமதமாக வந்திருக்கின்றாரே. அதனாலேதான் அப்படிச் சொல்லுகிறேன் என்றார். இப்படி சொல்லிவிட்டு புன்முறுவலுடன் திலகரைப் பார்த்தார் காந்திஜி. அந்தப் பார்வையிலே கனிவு மட்டும் இல்லை கண்டிப்பும் இருந்ததை அங்கேயிருந்த எல்லோரும் புரிந்துக் கொண்டார்கள். காந்திஜி காலத்துக்குக் கொடுத்த முக்கியத்துவம் இது.

எமர்ஸன் அப்படி என்று ஒரு சிந்தனையாளர் இருந்தார். அவர் ஒரு சமயம் ஐரோப்பாவில் பயணம் செய்தார். அப்போது லண்டனுக்குப் போனார். கவிஞர் கோல்ரிட்ஜ் என்பவர் லண்டனிலே இருந்தார். அந்தக் கவிஞரை சந்தித்துப் பேச வேண்டும் என்று ஆசைப்பட்டு அவரைத் தேடி கண்டுபிடித்துப் போனார். இவர் போய் சேர்ந்த போது காலை 10 மணி . அந்த நேரம் கவிஞர் கோல்ட்ரிஜ் தூங்கிக் கொண்டிருந்தார். அங்கே இருந்தவர்களிடம் விசாரித்திருக்கிறார்.

கவிஞர் இன்னும் எழுந்து கொள்ளவில்லை. பகல் 12 மணிக்கு மேலே வந்தீர்கள் என்றால் அவரைப் பார்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். உடனே இவர் திரும்பி வந்துவிடவில்லை. 12 மணி வரைக்கும் அங்கேயே காத்துக் கொண்டிருந்தார். அவர் எழுந்துகொண்ட பிறகு சந்தித்துப் பேசினார்.

எமர்ஸன் தனக்காக ரொம்ப நேரமாக காத்துக்கொண்டு இருந்திருக்கின்றார் என்ற விடயம் கோல்ட்ரிட்ஜ்க்கு தெரிய வந்தது. உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா?

மிஸ்டர் எமர்ஸன்! உங்களை இரண்டு மணி நேரத்துக்கு மேலே காத்திருக்க வைத்து விட்டேன் அதற்குத் தண்டனையாக நான் இங்கே நின்று கொண்டே உங்களுடன் பேசுகின்றேன். நீங்கள் உட்காருங்கள் என்றார். கவிஞர் கோல்ரிட்ஜ் எமர்ஸனுக்கு மட்டும் இல்லை. காலத்துக்கும் சேர்த்து கொடுத்த மரியாதை அது.

சேர்.சி.வி ராமன் இருந்தார் தானே. அவரும் அப்படித் தானே. அவர் பேச வேண்டிய ஒரு கூட்டம் மாலை 6 மணிக்கு ஆரம்பமாக வேண்டிய கூட்டம் மைசூர் சமஸ்தானத்தில் இருந்த ஒரு பெரிய உயர் அதிகாரி அந்த கூட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சேர்.சி.வி.ராமன் குறிப்பிட்ட நேரத்துக்கு 10 நிமிடம் முன்பதாகவே இங்கே வந்து சேர்ந்து விட்டார். ஆனால் தலைமை தாங்க வேண்டிவர் வந்து சேரவில்லை. சி.வி ராமனோ காலத்துக்கு மரியாதை கொடுக்கின்றவர் கடிகாரத்திலே மணி ஆறு ஆகிவிட்டது.

கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. தலைவர் இன்னமும் வந்து சேரவில்லை சேர்.சி.வி ராமன் பார்த்தார். குறிப்பிட்ட நேரத்துக்கு எழுந்து மேடைக்குப் போனார். பேச ஆரம்பித்து விட்டார். தலைவர் இல்லாமலே! பேச்சை எப்படி ஆரம்பித்தார். தெரியுமா? இதுவரை தரிசனம் அளிக்காத தலைவர் அவர்களே அப்படி என்று ஆரம்பித்தார்.

இந்த சம்பவத்தை இந்த காலத்துப் பேச்சாளர் ஒருத்தரிடம் சொன்னேன். அது என்ன சேர் பெரிய விடயம். நான் அதைவிட ஒரு படி மேலே என்றார். எப்படி என்று கேட்டேன். அவர் தலைவர் இல்லாமலே பேச்சை ஆரம்பித்தார் என்று தானே சொல்லுகிறீர்கள். நான் கூட்டமே இல்லை என்றால் கூட பேச ஆரம்பித்துவிடுவேன் சார் அப்படி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் வெள்ளிவிழா 20.12.2024

## பல்லாண்டு வாழியவே

மல்லிகை முல்லை செவ்வந்தி
எல்லோர்க்கும் ஏற்புடைய மலர்சூடி
கல்லா மாந்தர் தமக்கெனினும்
கருத்தில் நிலைக்கும் வலம்புரியே நீ வாழ்க

ஆண்டிரு பத்தைந்து வாழ்ந்திருந்தும் நீ
கொண்ட பணியில் உயர்ந்தே நின்றாய்
காலம் உனக்கொரு கவி படைக்கும்
கருத்தில் நிலைத்து நின்றொளிர்வாய்

கடமை செய்யா துழல் வோர்க்கும்
கருத்தில் நிலையாய் நின்றிங்கு
சீலம் நிறைந்த படைப்பளித்துன் புகழ் விரியும்
ஞாலமீதில் வலம்புரியே நீ வாழிய வாழியவே

சிந்திப்போர் தம் சிந்தனையில் நீ
முந்திக் கொள்ளும் முடிவிதுவே என
அந்திபக லென்றெண்ணாதுன் அழகொளிர
சங்குநாதம் செய்வாய் வலம்புரியே நீ வாழியவே

வானமது பூ மழையாய் பொழிந்த போதும் நீ
தானம் கொடுத்தது போல் தக்கதேனும் சேதி சொல்லி
பானம் கொடுப்பது போல் பகலிரவாய் பணிபுரிந்து
வானம் எதிரொலிக்கும் அமைதி தரும் செய்திசொல்வாய்

சிந்திப்போர் சிந்தனையில் நடுநிலை தவறா நீ
சொந்தம் தகமென்றது தனைவிட்டே சமநீதி
தந்தாய் தரணிதான் "வாழ்த்தும் நாளிதழ்" எனவே நீ
முந்திப் புவியில் நிற்கின்றாய் வாழிய பல்லாண்டு வாழியவே

- வளவை வளவன்

## "உயிர் எழுத்தில் உலகை வலம் வந்த வலம்புரி"

அன்பு வாசகரின் அடி மனதில் உறைந்ததினால்
ஆண்டு 25 இலும் ஆட்டம் காணாதிருக்கின்றாய்
இமயத்தை விடவே உயர வேண்டும் இங்கே
ஈன்றவள் மனம் போன்ற இதயமடா உனக்கு
உண்மையை உரைப்பதில் உனக்கு நிகர் நீயே
ஊமையாய் இருப்பேனோ என உரக்கச் சொன்னாயே
எங்குமே எதிலுமே முதலிடத்தில் நின்றாய்
ஏணியாய் எல்லோர்க்கும் ஏற்றம் புரிந்தாய்
ஐயம் என்பதில்லை அத்தனை எழுத்திலும்
ஒன்றுபட்டே நிற்பாய் யார் உம்மை வீழ்த்திலும்
ஓங்காரமாய் ஒலித்திடுவாய் தமிழ் மண் அனைத்திலும்
ஔவைத் தமிழாய் வாழ அன்புடன் வாழ்த்துகிறேன்
இஃது உண்மை எனவே உரிமையுடன் போற்றுகிறேன்
வெள்ளி விழாக் காணும் வைரம் மிக்க வலம்புரியே
ஆசிரியர் ஊழியர் துணை புரியும் அனைவருக்கும்
துணவியூர் நடாவின் தூய நல் வாழ்த்துக்கள்

-துணவியூர் நடா

## வலம்புரிக்கு அகவை இருப்பத்தைந்து வெள்ளிவிழா வாழ்த்துப்பா

நம்பிக்கை மிக்க நாளிதழாய் நீயும்
நானிலத்தில் வலம் வந்து வெற்றி நடை போட்டு
வெள்ளிவிழா கொண்டாடும் போதினிலே
வாசகர் மனதில் பூரிப்பு ஏற்படுகின்றதே
வலம்புரியாய் நீயும் வலம் வந்திடும் வேளையிலும்
ஞாயிறு தோறும் சங்குநாதமாய் ஒலித்து நீயும்
நியாய அநியாயங்களை ஆலடி மாநாட்டிலே
அலசி ஆராய்ந்து ஆலோசனை கூறி நீயும்
சரியான தீர்ப்பும் வாங்கித்தந்திடுவாய்
ஆசிரிய தலையங்கத்தில் நீயும் மக்களின்
ஆதங்க வெளிப்பாட்டை ஒளிவு மறைவின்றி
கச்சிதமாய் கூறிடுவாய்
எண்ணற்ற கைகளில் தவழ்ந்திடும் நாளிதழே
எளிமையான பாமர மக்களும் புரிந்திடும் வகையில்-செய்திகள் தந்திடுவாயே
தினம் தோறும் உன் திருமுகம் காண காத்திருப்போம்
இருபதாம் திகதி மார்கழித் திங்கள் இருபத்து நான்காம் ஆண்டு
பாரினிலே நீ பிறந்து வெள்ளி விழா கொண்டாடும் வேளையில்
மீண்டும் மீண்டும் புத்துணர்வு பெற்று வளர வாழ்த்துகின்றேன்.

- ஆ.செல்வி, திருநாவலூர்

## வலம்புரியின் வெள்ளி விழா-20.12.2024

### தமிழ்த் தேசியத்தின் கலங்கரை விளக்கம் - வலம்புரி

தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றின் பின்னணியில் தமிழர் தேசம் சந்தித்து வந்த, சந்தித்து வரும் அடக்குமுறை, நெருக்கடிகள் ஈழத்தமிழ் ஊடகங்களையும் ஊடகர்களையும் விடாது தொடர்ந்தே வருகின்றன.

பெருந்தேசியவாதத்தினால் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டு குரல்வளை நெருக்கப்பட்டுள்ள நிலையில், ஈழத்தமிழ் இனத்தின் உரிமைக் குரலாக ஈழத்தமிழ் ஊடகங்களே ஓங்கி ஒலித்து வருகின்றன.

அந்தவகையில் தமிழ்த் தேசியம் சார்ந்த செய்திகளை மக்களிடையே எடுத்துச் சென்று உரமூட்டும் வகையில் உன்னதமான பங்காற்றி வரும் வலம்புரி நாளிதழ் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா கண்டுள்ளமை பெரும் சாதனையாகும்.

இவ்வாறு ஈழத்தமிழ் ஊடகப் பரப்பில் தமிழ்த் தேசியத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழும் வலம்புரி நாளிதழின் பயணம் மங்காப் புகழோடு தொடர யாழ்.வடமராட்சி ஊடக இல்லத்தின் சார்பில் அகம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இரா.மயூதரன்,
செயலாளர்,
யாழ்.வடமராட்சி ஊடக இல்லம்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 80,000 ஏக்கர் விளைநிலங்கள்

(கொழும்பு)

மோசமான வானிலை காரணமாக கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த சுமார் 80,000 ஏக்கர் விளைநிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

2024/25 பெரும்போக நடவடிக்கையில் கடந்த நவம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களை ஆய்வு செய்யும் பணி தற்போது வேளாண் வளர்ச்சித் துறையின் உதவியுடன் மற்றும் விவசாயிகள் அமைப்புகளின் பங்களிப்புடன் செய்யப்படுகிறது.

இவற்றில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் சேத ஆய்வு தற்போது நிறைவடைந்துள்ளது.

இதுதவிர, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் 29 ஆம் திகதிக்குள் பயிர்ச் சேதங்கள் தொடர்பான ஆய்வுப் பணிகளையும், அநுராதபுரம், குருநாகல், மாத்தளை மாவட்டங்களில் பயிர்ச் சேதங்கள் தொடர்பான ஆய்வுப் பணிகளை டிசம்பர் 30 ஆம் திகதிக்குள் முடிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பயிர் இழப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பீடு தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டவுடன், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கணக்குகளில் இழப்பீட்டுத் தொகை வரவு வைக்கப்படும் என விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)

# 'அஸ்வெசும' நிலுவைத்தொகையை வைப்பிலிட நடவடிக்கை



(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி பயனாளர்களுக்கு இது வரையில் செலுத்தப்படாத நிலுவைத் தொகையை அவர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நலன்புரி நன்மைகள் சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் முதலாம் கட்டத்தில் தகுதிபெற்ற இரண்டு இலட்சத்து 12,423 குடும்பங்களுக்கான நிலுவைத் தொகை, இன்று வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. (நி-8)

# மின் கட்டண திருத்தம்

## மாகாண மட்டத்தில் கலந்தாய்வு ஆரம்பம்

(கொழும்பு)

உத்தேச மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பான பொது கலந்தாய்வு இன்று மாகாண மட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் ஜனவரி 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என ஆணைக் குழு முன்னர் அறிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 666





"ஹா! ஹா! ஹா! ஹா!" என்று அறுபதினாயிரம் பேய்கள் சிரித்தன. வந்தியத்தேவன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நாலாபுறமும் பார்த்து விழித்தான். பள்ளிப்படைச் சுவரில் சாய்ந்தபடியே சிறிது நேரம் தான் கண்ணயர்ந்துவிட்டதாக அறிந்து கொண்டான். அந்த அரைத்தூக்கத்தில் கண்ட பயங்கரமான கனவை மறுபடி நினைத்துப் பார்த்தான்.

கனவுதானா அது! இல்லை! உடுக்கின் முழக்கத்துக்கு இணங்கத் தேவராளன் பாடிய பாடலில் போர்க்களத்தைப் பற்றிச் செய்த வர்ணனை தான் அப்படி அவன் மனக்கண் முன் தோன்றியிருக்க வேண்டும்.

அச்சமயம் தேவராளன் பாண்டியர் படைக்கு முன்னால் பல்லவரும், கங்கரும் தோற்று ஓடியதைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தான். அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் சிரித்த களிச் சிரிப்புத்தான் அப்படி அநேகாயிரம் பேய்களின் சிரிப்பைப் போல் ஒலித்து, வந்தியத்தேவனைத் திடுக்கிட்டுக் கண் விழிக்கச் செய்திருக்க வேண்டும். உடுக்கு முழக்கம் திடீர் என்று நின்றது. தேவராளனும் பாட்டை உடனே நிறுத்தினான்.

சற்றுத் தூரத்தில் ஒரு தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அது நெருங்கி நெருங்கி வந்தது. தீவர்த்தி வெளிச்சத்தைத் தொடர்ந்து ஒரு பல்லக்கு வந்தது. பல்லக்கைச் சுமந்து வந்தவர்கள் அதைக் கீழே இறக்கி வைத்தார்கள். பல்லக்கின் திரைகள் விலகின. உள்ளேயிருந்து ஒரு ஸ்திரீ வெளியில் வந்தாள். ஆம் அவள் பழுவூர் ராணி நந்தினி தான். ஆனால் முன் தடவைகளில் வந்தியத்தேவன் பார்த்தபோது அவள் சர்வாலங்கார பூஷிதையான மோகினியாக விளங்கினாள். இப்போது தலைவிரி கோலமான உக்கிரதுர்க்கா தேவியாகக் காட்சி தந்தாள். அவளை இந்தத் தோற்றத்தில் பார்த்த வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் ஒரு திகில் தோன்றியது. அவன் உடம்பில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

நந்தினி பல்லக்கிலிருந்து இறங்கியதும் சிம்மாசனத்தில் வீற்றிருந்த சிறுவனைப் பார்த்தாள். அவனையே பார்த்த வண்ணம் நடந்து வந்தாள். சிறுவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். மற்ற அனைவரும் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிறுவனைப் பாழும் மண்டபத்துக்குத் தேடி ஓடி வந்த ஸ்திரீ அவனால் "அம்மா" என்று அழைக்கப்பட்டவள், சிம்மாசனத்துக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தாள். நந்தினி சிறுவன் அருகில் வந்ததும் தன் இருகரங்களையும் நீட்டினாள். சிறுவன் அவளையும் தனக்குப் பின்னால் நின்ற ஸ்திரீயையும் மாறி மாறிப் பார்த்தான்.

"நீ தானே என் அம்மா? இவள் இல்லையே" என்று கேட்டான். "ஆம், கண்மணி!" "இவள் ஏன் என்னுடைய அம்மா என்று சொல்லிக் கொள்கிறாள்?" "அவள் உன்னை வளர்த்த தாய்!"

"நீ ஏன் என்னை வளர்க்கவில்லை? ஏன் உன்னுடன் என்னை வைத்துக் கொள்ளவில்லை? இவள் எதற்காக என்னை எங்கேயோ மலைக் குகையில் ஒழித்து வைத்துக் கொண்டிருக்கிறாள்?"

"கண்மணி! உன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத்தான். உன் தந்தையைக் கொன்றவர்களைப் பழிக்குப் பழி வாங்குவதற்காகத்தான்!"


"ஆமாம் அது எனக்குத் தெரியும்!" என்று சிறுவன் எழுந்து நந்தினியை அணுகினான். நந்தினி அவனைத் தன் இரு கரங்களாலும் அணைத்துக் கொண்டாள், உச்சி முகந்தாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## செல்வனும் திருடனும்



ஓர் ஊரில் ஒரு பெரிய செல்வந்தன் இருந்தான். அவன் எப்படியெப்படியோ பணம் சேர்த்தான். ஊரிலேயே பெரிய பணக்காரன் ஆகிவிட்டான். ஆனால் அவன் பணக்காரனாக இருந்து என்ன பயன் ?

பெற்ற தாய் தகப்பனுக்குக்கூட ஒரு காசு கொடுக்க மாட்டான். பிள்ளைகள் ஆசையாகக் கேட்கும் அற்பப் பொருட்களைக் கூட வாங்கிக் கொடுக்க மாட்டான். தன் வயிற்றுக்கே அவன் சரியாகச் சாப்பிடுவதில்லை.

சோற்றை வடித்துப் பச்சைமிளகாயைக் கடித்துக்கொண்டு சாப்பிட்டால் போதும் என்பான். சாம்பார் வைக்க வேண்டுமென்றால் பருப்புப் படி ஒரு ரூபாயல்லவா ? ஏன் வீண் செலவு என்று கேட்பான். உறவினர்கள் யாரும் அவனைத் நாடி வருவதேயில்லை. ஏதாவது உதவி செய்யக் கூடியவனாய் இருந்தால் அல்லவா அவனை தேடி வருவார்கள்.

அவனுக்கு நண்பர்களே கிடையாது. யாராவது ஆபத்துக் காலத்தில் வந்து கைமாற்றுக் கேட்டால் கூடக் கொடுக்க மாட்டான். திரும்ப வசூல் ஆகுமோ ஆகாதோ என்று பயந்து அவன் அந்த பழக்கமே வைத்துக் கொள்ளவில்லை. துன்பத்தையெல்லாம் சொல்லித் தொழுது அழுது கேட்டாலும் அவனிடமிருந்து ஒரு சல்லிக் காசுகூடப் பெற முடியாது.

அந்தப் பணக்காரன் வீட்டுக்குள் ஒரு நாள் இரவு கொள்ளைக்காரன் ஒருவன் புகுந்தான். நேராகப் பணக்காரன் படுத்திருந்த அறைக்குச் சென்றான். ஒரு கையில் தீவட்டியும் மறு கையில் வெட்டரிவாளும் வைத்திருந்த அந்தக் கொள்ளைக் காரன் அவனைத் தட்டியெழுப்பினான்.

செல்வன் திருடனைக் கண்டு திடுக்கிட்டான். திருடன் இருப்புப் பெட்டிச்சாவியைக் கேட்டான். அவன் கொடுக்க மறுத்தான். வெட்டரிவாளால் காலிலும் கையிலும் இரண்டு மூன்று இடங்களில் வெட்டினான் திருடன்.

வலி தாங்க முடியாமல் பணக்காரன் அழுதான். கடைசியில் உயிருக்குப் பயத்து அவன் இரும்புப் பெட்டிச் சாவியைக் கொடுத்து விட்டான். பணம் இருந்த முழுவதையும் கொள்ளைக்காரன் மூட்டை கட்டிக் கொண்டு போய் விட்டான். பணக்காரன் அழுது கொண்டிருந்தான். அவனைத் தேற்ற யாரும் வரவில்லை.

கருத்துரை :- அழுது தொழுது கேட்டாலும் இரக்கப்பட்டுச் சிறிது பொருள் கொடுக்காதவர்கள், அடித்து உதைத்துக் கேட்பவர்களுக்குப் பயந்து இருப்பதையெல்லாம் கொடுத்து விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு காரியத்தையும் உள்ளன்போடு செய்யுங்கள்; பின் வேறுவிதமாக செய்ய ஒரு போதும் மனம் விரும்பாது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் நிலங்களை விரைந்து விடுவிக்க வேண்டும்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சி அமைவதற்குத் தமிழ் மக்கள் தங்களின் காத்திரமான வகிபங்கை வழங்கியுள்ளனர்.

இவ்வாறு தமிழ் மக்கள் அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு மூலகாரணம், ஜனாதிபதி அநுர இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவார் என்ற ஒரே நம்பிக்கையாகும் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இங்கு, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது பல கட்டங்களைத் தாண்டிச் செல்ல வேண்டிய பயணம் என்பது ஏற்புடையது.

அதாவது தமிழ் மக்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்பது மட்டும் இனப் பிரச்சினையல்ல.

மாறாக, தமிழ் மக்களின் சொந்த நிலங்கள் படைத்தரப்பால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

பொதுவில் ஒருவரின் பெயரில் இருக்கக்கூடிய உறுதிக்காணியை எவரும் ஆக்கிரமிக்க முடியாது.

அவ்வாறு ஆக்கிரமித்தால், அதனைப் பொலிஸார் மீட்டு சம்பந்தப்பட்டவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

எனினும் இலங்கையில் தமிழர்கள் என்பதால் அவர்களுக்குச் சொந்தமான காணிகளைப் படையினர் கபளீகரம் செய்து தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இதன் காரணமாக விவசாயத்துக்குரிய பெருமளவு காணிகளை தமிழ் மக்கள் இழந்து பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி நாம் பேசுவதற்கு முன்னதாக, தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்களைப் படையினர் விடுவிக்க வேண்டும்.

இதை உடனடியாகச் செய்யும்போதுதான் அநுரவின் அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்வர்.

இதைவிடுத்து, படிப்படியாகக் காணி விடுவிக்கப்படும் என்பது காலம் கடத்துகின்ற ஒரு செய்தியாகவே பார்க்கப்படும்.

அதிலும் படிப்படியாக என்பதில் நாம் முரண்படக்கூடாது என்ற கருத்தியல் யாரிடமாவது இருக்க முடியும். அவ்வாறு இருக்குமிடத்தில், அதிலும் நியாயமுண்டு.

ஆனால் படிப்படியாக என்பது வாரம் - மாதம் என்ற வரையறையைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இதைவிடுத்து அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளைக் குறிப்பிட்டு அதனையே படிப்படியாக என்று கூறப்படுமாயின், அதைவிட்ட ஏமாற்று நாடகம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

ஆக, கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான 11 ஆயிரம் ஏக்கர் நிலத்தை விவசாயச் செய்கைக்காக சிங்கள மக்களுக்கு வழங்குவதற்குக் கையொப்பமிட்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க; தமிழ் மக்களுக்குச் சொந்தமான அவர்களின் உறுதிக்காணியை அவர்களிடம் ஒப்படைப்பதற்குத் தயங்கவும் தாமதிக்கவும் கூடாது என்பது தான் தமிழ் மக்களின் நிலைப்பாடாகும்.

# கிளிநொச்சி நகரில் 36 வீதமான காணிகள் இராணுவத்தினர் வசம்

### விடுவிக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் நகரத் திட்டமிடலுக்குரிய காணிகளில் 36 வீதமானமை, போர் முடிவுற்ற 14 ஆண்டுகளின் பின்னரும் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாமலுள்ளமை மாவட்டத்தின் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக நேற்று நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளும் பொருட்டு, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்பு, பூர்த்தி செய்யப்படாத வீட்டுத்திட்டங்களுக்கான விசேட நிதியீட்டங்களைக் குறித்த பயனாளிகளுக்குப் பெற்றுக்கொடுத்தல், மதுபானசாலைகளின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தல், வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்தல் மற்றும் வெள்ளப் பாதிப்பினால் சேதமடைந்த வீதிகளின் புனரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் சார்ந்த முன்மொழிவுகள், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடந்த 20ம் திகதி எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அதனடிப்படையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் குறித்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகம், கலாசார மண்டபம் அமைக்கப்பட்டிருந்த காணி, கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்கு உகந்த சந்திரன் பூங்காக் காணி உள்ளிட்ட நகரப்புறக் காணிகள் பலவற்றை இன்றளவும் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை நகரின் முதன்மைப் பாடசாலைகளுள் ஒன்றான கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் மைதானத்துக்கான பாதையை விடுவிக்குமாறு கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட சமநேரத்தில் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது.

441 ஏக்கர் விஸ்தீரணமுடைய வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையின் 410 ஏக்கர் காணி தற்போதும் இராணுவத்தின் வசமுள்ளது.

இதனை விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கும் பட்சத்தில் இந்த மாவட்டத்தின் நூற்றுக்கணக்கானோருக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதால் பொதுப் பயன்பாட்டுத் தேவைகளுக்குரிய காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவிக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் வகையில் அமைவிடத்தைக் கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுப்பயன்பாட்டு நிறுவனங்களை அண்மித்தும், பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலைகளை மூடுவதென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அதன் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

மருந்துகள் தொடர்பில்

## தரநிலைப் பரிசோதனையை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

மருந்துகள் தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தரநிலைப் பரிசோதனைகளை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகத் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போது இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் தரத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளின்

## வருடாந்த இடமாற்றம் 6 மாதங்களுக்கு நிறுத்தம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவிருந்த அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளின் வருடாந்த இடமாற்றங்களை எதிர்வரும் 06 மாதங்களுக்கு இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ்மாஅதிபர் பிரியந்த வீரசூரியவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பான அறிவித்தல் கடந்த 24ஆம் திகதி நாட்டின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம-7)

திருக்கோவிலில் நீராடச்சென்ற நிலையில்

## காணாமல் போன மூவர் சடலங்களாக மீட்பு

அம்பாறை - திருக்கோவில் சங்கமன்கண்டி கடற்பகுதியில் நீராடச் சென்ற நிலையில் காணாமல் போன மூவரின் சடலங்களும் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலை குறித்த மூவரும் கடலுக்கு நீராடச் சென்ற நிலையில் அலையில் அள்ளுண்டு காணாமல் போயிருந்தனர்.

குறித்த மூவரும் பொலிஸார் மற்றும் கடற்படையினரால் தேடப்பட்டு வந்த நிலையில் நேற்று மாலை விநாயகபுரம் மங்கமாரி கடற்கரையில் அவர்களது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அம்பாறை பொத்துவில் சங்கமன்கண்டிப் பகுதியினைச் சேர்ந்த 15 வயதுடைய மகன், 17 வயதுடைய மருமகன் மற்றும் 38 வயதுடைய தந்தை ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். (ம-7)

## மின்சார வேலியில் சிக்கிய இளைஞன் பலி

(காலி)

கொஸ்கொடை - பெலகஸ்பலாத்த பிரதேசத்தில் உள்ள வயல் ஒன்றில் மின்சார வேலியில் சிக்கி இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக காலி பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது.

கொஸ்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞன் தனது வீட்டிற்கு அருகில் உள்ள வயலை வன விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக வயலைச் சுற்றி சட்டவிரோதமாக மின்சார வேலிகளைப் பொருத்தியுள்ளார்.

இந்நிலையில் சம்பவத்தன்று இந்த இளைஞன் வயலுக்குச் சென்றுள்ள நிலையில் மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளார். (ம-7)

## களுகங்கையில் பெண்ணின் சடலம் மீட்பு

களுகங்கையில் பெண் ஒருவரை முதலை பிடித்து இழுத்துச் சென்ற நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொடங்கொட கொஹொலான வடக்குப் பிரதேசத்தில் வசிக்கும் 50 வயதுடைய பெண்ணொருவரையே முதலை இழுத்துச் சென்றிருந்தது.

களுத்துறை கொஹொலன பிரதேசத்தில் களுகங்கைக்கு அருகில் குறித்த பெண் பாத்திரம் கழுவச் சென்றவேளை அவரை முதலை இழுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதைத் தொடர்ந்து படகுகள் மூலம் பிரதேச மக்கள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் பின்னர் முதலை இழுத்துச் சென்ற பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிக்கு எதிராக சட்ட நடவடிக்கை

# உயர்நீதிமன்றம் வழங்கிய சரித்திர தீர்ப்பு!

**திவுலப்பிட்டியவைச் சேர்ந்த வண.வெல்லவே ஸ்ரீ சந்தானந்த தேரர், மினுவாங்கொட மற்றும் குருநாகல் மாவட்ட நீதிமன்றங்களில் சட்டத்தரணி செந்தஹேந்தி சரத் விஜேசிறி டி.சில்வா ஊடாக பௌத்த விகாரைகள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.**

**இது தொடர்பில் தொழில்முறைக் கட்டணமாக 44 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பிரஸ்தாபச் சட்டத்தரணி பெற்றுள்ளார்.**

**எனினும் குறித்த சட்டத்தரணி குறித்த வழக்குகளை சரியான முறையில் கையாளாமல், தன்னை ஏமாற்றிவிட்டார் என வணக்கத்திற்குரிய தேரர், சட்டத்தரணிக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.**

**இந்த வழக்கை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.**

**உயர் நீதிமன்ற நீதியரசர்கள் எஸ்.துரைராஜா, ஜே.குமுதினி விக்கிரமசிங்க, ஜே.அச்சலா வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயம் குறித்த சட்டத்தரணியை குற்றம் புரிந்தவராக அறிந்து தீர்ப்பளித்தது.**

**இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் உயர்நீதிமன்றம் வழங்கிய இந்தத் தீர்ப்பின் அறிக்கை பொது மக்களின் நன்மை கருதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தில்

நீதித்துறைச் சட்டம், 1978 ஆம் ஆண்டின் எண். 2, பிரிவு42(2) இன் அடிப்படையில் ஒரு சட்டத்தீர்ப்பு விதியின்விடயம்: திரு. செந்தஹேந்தி சரத் விஜேசிறி டி சில்வா, வழக்கறிஞருக்கு எதிரானது

வண. வெல்லவே ஸ்ரீ சந்தானந்த தேரர்,
உள்ளலபொல ஸ்ரீ சுகதவனராம புராண விகாரை,திவுலபிட்டிய

**புகார்தாரர்**

**எதிரானது.**

திரு. எஸ். சரத் டபிள்யூ. டி சில்வா,
இல. 78/3, 2ஆம் பாஸ்டியன் மாவத்தை,
படகனா விதி,
பிடா-கோட்டே.

**பதிளைிப்பவர்**

முன்பு: **எஸ்.துரைராஜா, பிசி, ஜெ,**
**குமுதினி விக்கிரமசிங்க, ஜே. மற்றும்**
**அச்சலா வெங்கப்புலி, ஜே**

**சட்ட ஆலோசகர்:** பிரதிவாதிக்காக நாகிதா விஜேசேகர

றொஹான் சஹபந்து பிசி, சட்டத்தரணிக்கு திருமதி.சதுரிகா எல்விட்டிகலவுடன் இலங்கை சட்ட நிபுணர் சங்கம்.

நயோமி கஹாவிட்ட, கௌரவத்திற்கான எஸ்.எஸ்.சி. அட்டர்னி ஜெனரல்.

விசாரணை: 29 ஜனவரி 2024, 26 மார்ச் 2024 மற்றும் 03 ஏப்ரல் 2024

முடிவு: 03 செப்ரெம்பர் 2024

1. வணக்கத்துக்குரிய வெல்லவே ஸ்ரீ சந்தானந்த தேரோ, என்ற பெயரில் அபிசேகம் செய்யப் பட்ட பிக்கு ஒருவரால் பிரதிவாதியான திரு செந்தஹேந்தி சரத் விஜேசிறி டி சில்வா- வழக்கறிஞர் அவர்களுக்கு எதிரான முறைப்பாடு 22 டிசம்பர் 2021 மற்றும் ஆகஸ்ட் 15. 2022 திகதியிட்ட பிரமாணப் பத்திரங்கள் (வாக்குமூலம்)மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

2. வணக்கத்திற்குரிய தேரரிடமிருந்து மேற்படி முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்டதும், பதிவாளர்-உச்சநீதிமன்றம், அடிப்படை-பூர்வாங்க நடைமுறையைப் பின்பற்றி, இந்த விதிக்கு எதிராக மேற்படி பிரதிவாதியானவருக்கு எதிராக அதில் குறிப்பிடப் பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக பதிலளித்தார்.

3.பிரதிவாதி வழக்கறிஞருக்கு எதிராக டிசம்பர் 06, 2022 திகதியிட்ட இந்த விதி பின்வருமாறு:-"இதனால், இந்த நீதிமன்றத்தில் வணக்கத்துக் குரிய வெல்லவே ஸ்ரீ சந்தானந்த தேரோ உல்லலபொல ஸ்ரீ சுகத வனராம புராண விகாரை, திவுலபிட்டிய (இனிமேல் இங்கு சில சமயங்களில் "முறைப்பாடு செய்பவர்" என குறிப்பிடப்படுகிறது) பிரமாணப்பத்திரங்களின் படி 22 டிசம்பர் 2021 மற்றும் 15.08.2022 திகதியிட்ட பிரமாணப் பத்திரங்கள் **நீங்கள் வழக்கறிஞராக இருப்பதால்**

குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தில் "முறைப்பாடு செய்பவர்" வழக்கு முறைப்பாட்டு இலக்கம் No.L/8211 இல் அமைவாக ஆஜராகும் படி நிறுத்தி வைக்கப்படுகின்றீர். **மற்றும் மினுவாங்கொடை** மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு முறைப்பாட்டு இலக்கம் No. L/196 இன் படியும் நடவடிக்கை எடுக்கத் தவறியது. கூறப்பட்ட மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகளுக்கு ஆவன செய்வதற்கு தவறியிருக்கின்றீர்கள். இதன் விளைவாக அந்த வழக்குகள், வழக்கு முறைப்பாட்டு இலக்கங்கள் No. L/8211 மற்றும் No.L/196 ஆகியவை பல திகதிகளில் ஒத்திவைக்கப்படுகின்றன.

மேலும் மேற்படி முறைப்பாட்டினை மேற்கொண்ட வணக்கத்துக்குரிய வெல்லவே ஸ்ரீ சந்தானந்த தேரோ மூலமும் மற்றும் மேற்படி முறைப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் தெரியவருவதாவது.


a) நீதிமன்றத்தில் புகார் செய்பவர் மற்றும் குருநாகல் மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் L/8211 மற்றும் மினுவாங்கொட மாவட்ட நீதிமன்ற வழக்கு எண். L/196. ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து தொழில்முறை விடயங்களிலும் கவனம் செலுத்துவதற்கு நீங்கள் பல சந்தர்ப்பங்களில் புகார்தாரரிடமிருந்து ("முறைப்பாடு செய்த வரிடமிருந்து") பணம் பெற்றுள்ளீர்கள். அத்துடன் மொத்தமாக 'ரூபா 4,450, 000/- (நான்கு மில்லியன் நானூற்று ஐம்பது ஆயிரம் ரூபாய்) புகார்தாரரால் அவர் சார்பாக பிரதிநிதித்துவம் செய்வதற்காக உங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

b) குருநாகல் மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் L/8211 மற்றும் மினுவாங்கொட மாவட்ட நீதிமன்ற வழக்கு எண். L/196. ஆகியவற்றுடன் தொடர்புடைய வழக்குகளின் நடவடிக்கைகளுக்காக தேவையான தொழில்சார் சேவைகள் நீங்கள் உதவித்தொகை அனைத்தையும் சாக்காகப் பெற்றுள்ளீர்கள். ஆயினும் கூறப்பட்ட வழக்குகளின் நடவடிக்கைகளில் மேற்கண்ட மாவட்ட நீதிமன்றங்களுக்கு முன் புகார்தாரரைப் பிரதிநிதித்துவப்படுத்தப் பல திகதிகளில் பல தடவைகள் தவறிவிட்டீர்கள்.

c) நீங்கள் புகார்தாரருக்காக பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞராக இருந்திருப்பதால் நீதிமன்ற வழக்கு இலக்கம் L/8211 இற்கு அடுத்த திகதியில் முன்நிலையாகுமாறு குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தால் ஒருமுறை கோரப்பட்டுள்ளீர். ஆயினும் குறிப்பிட்ட திகதியில் நீங்கள் ஆஜராகாதிருந்தால் மேற்படி கூறப்படும் வழக்கு ஒத்திவைக்கப்படும் என்பதை தாங்கள் தெளிவாக அறிந்துள்ளீர்கள்.

d) மேற்கூறிய வழக்குகளில் நீங்கள் ஆஜராகி நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தாலும் புகார்தாரரின் மூல ஆவணங்களைப் புகார்தாரரிடம் திரும்பக் கொடுக்காமல் தொடர்ந்து வைத்திருந்தீர்கள் எனக் கூறப்படுகின்றது.

இருப்பினும் பிரமாணப் பத்திரத்தை, சமர்ப்பிக்குமாறு 26.01.2022 திகதியிட்ட கடிதம் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் உயர் நீதிமன்றத்திற்கு மூலம் புகார்தாரரின் பிரமாணப் பத்திரம் 22.12.2021 திகதியிட்ட ஆவணங்களை அவதானிப்புகளைத் தெரியப் படுத்தப்படும்படி கோரப்பட்டது. அதற்கு இன்றுவரை எந்தக் கடிதமும் திரும்ப அனுப்பப்படவுமில்லை பதிலளிக்கப்படவுமில்லை.




a) அத்துடன் இதனால் நீங்கள் ஒரு வழக்கறிஞராக இருந்து உங்கள் வெளிப்பாடுகள் வாடிக்கையாளரின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் / அல்லது தப்பெண்ணம் உருவாக்கும் என வணக்கத்துக்குரிய வெல்லவே ஸ்ரீ சந்தானந்த தேரோ குறிப்பிடுகின்றார். அத்துடன்

b) நீங்கள் ஒரு வழக்கறிஞராக இருப்பதால் திறமை மற்றும் உங்கள் வாடிக்கையாளரின் சிறந்த நலன், உரிய கவனத்துடன் செயற்படவில்லை. குறிப்பாக மனுக்களை தாக்கல் செய்வதிலும் வணக்கத்துக்குரிய வெல்லவே ஸ்ரீ சந்தானந்த தேரோ சார்பாக முன் நிலையாவதிலும் கவனத்துடன் செயற்பட வில்லை.

மேலும், மேற்படி வணக்கத்துக் குரிய வெல்லவே ஸ்ரீ சந்தானந்த தேரோ அவர்களால் மேற்படி செய்யப்பட்ட முறைப்பாடு வெளிப்படுத்துவது: நீங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை செய்ய தவறியதாகும் என்பதாகும்

a) பிரிவு 42(2)ன் வரையறைக்குள் வரும் ஏமாற்றுதல் மற்றும்/ அல்லது முறைகேடு தொடர்பான நீதித்துறை சட்டம் உயர் நீதிமன்ற விதிகள், 1978 இன் விதி 79 உடன்பட்டிருப்பதற்கமைய நீங்கள் ஒரு வழக்கறிஞராக இருக்க தகுதியற்றவர் என குறிப்பிடுகின்றது. மற்றும்

b) நீங்கள் திறமைகளைப் பயன்படுத்த தவறியமையும் அத்துடன் மனுக்களை தாக்கல் செய்யத் தவறியதில் முன் நிலையாவதிலும் மாவட்ட நீதிமன்ற வழக்குகள் தொடர்பான உயர் நீதிமன்றம் சட்ட விதி 15ஐ 1988 படி (வழக்கறிஞர்களுக்கான நடத்தை மற்றும் ஆசாரம் நன்நடத்தைக் கோட்பாடு) முன்நிலையாவதிலும் தவறினீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அராலியைச் சேர்ந்த ப.சஞ்சயன் (வயது-22) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

கிறிஸ்துமஸ் தினமான புதன்கிழமை இரவு குறித்த இளைஞன் மற்றொரு இளைஞனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

வவுனியா, கோவில்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் கரையில் இருந்த மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற இளைஞன் பலத்த காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

மற்றைய நபர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்துத் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

மஹஜன சம்பத
திகதி 2024.12.26
சீட்டிழுப்பு இலக்கம் 5697
Y 4 8 0 6 3 9
அத சம்பத Y 0 6 3 9
சீட்டிழுப்பு இலக்கம் 0272
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1727
C 22 45 47 59 C
69822

மெகா பவர்
திகதி 26/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2045
E 12 19 44 55 79
178146

லக்கி 7 VIP
திகதி 2024.12.26
சீட்டிழுப்பு இலக்கம் 0523
E 5 7 8 7 7 8 E

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3939
சீட்டிழுப்பு திகதி 26.12.2024
Q 22 33 65 77
Q 090820

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.26
சீட்டிழுப்பு இலக்கம் 1006
துலாம் 04 09 23 28 துலாம்
085529 06

## விபரீத...

பகுதியைச் சேர்ந்த சின்னத்துரை கிருஸ்ணா (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழப்புத் தொடர்பில் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் முன்னெடுத்தார். (ம-7,60)

## இளம் குடும்பஸ்...

திகதி முற்பகல்யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம்தொடர்பில் யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## குடும்பஸ்தரின்...

(வயது-53) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

உயிரிழப்புத் தொடர்பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

உயிரிழப்புக்கான காரணம் தெரியாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஊடகங்களுக்கு...

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும் தம்பிராசா மற்றும் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவன் ஆகியோருக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

இந்நிலையில் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள தம்பிராசாவுக்கு யார் அனுமதி வழங்கியது? எந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது? கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்துபவர்களை ஏன் உள்ளே விடுகின்றீர்கள்?, தம்பி ராசாவை வெளியே அகற்றுங்கள் என அர்ச்சுனா கூறினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சந்திரசேகர், இனிமேல் பொதுமக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதி இல்லை எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## இரணைமடுக்...

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அர்ச்சுனா,

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் 37 கன அடி நீரைச் சேமித்து வைக்க முடியும். ஆனால் தற்போது 27 கன அடி நீரே நிரப்பப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும், மேலதிகமாக வெளியேறும் நீரினை ஏன் யாழ்.மாவட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான சரியான திட்டம் வகுக்கப்படவில்லை?

வெளியேறும் நீரினை சரியான அளவில் பயன்படுத்துவதன் மூலம் யாழ்ப்பாணத்திற்குத் தேவையான நீரினை வழங்க முடியும். இதில் அதிக அரசியல் பின்புலங்கள் காணப்படுகிறது.

கிளிநொச்சியில் விவசாயம் செய்யாமல் யாழில் உள்ளவர்கள் உண வருந்த முடியாது. அதேபோல யாழில் குடிநீர் வசதி இல்லை என்ற காரணத்தினால் கிளிநொச்சியில் வந்து மக்கள் குடிபெயர முடியாது.

இதன்போது அமைச்சருக்க வேண்டு கோளொன்றை முன்வைக்கின்றேன்.

இந்த நீர் விநியோகத் திட்டத்தில் எவ்வித அரசியல் இலாபத்தையும் எதிர்பார்க்காமல் மக்களின் நலனுக்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றார். (ம-7,315)

## கிளிநொச்சி...

நடைபெற்றது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இலங்கை பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவனுக்கும்பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனாவுக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

இதன்போது சகாதேவன் அர்ச்சுனாவைப் பார்த்து, பாராளுமன்ற உறுப்பினர் போல இல்லாமல் நீங்கள் ஏன் பைத்தியக்காரத்தனமாகப் பேசுகின்றீர்கள் என்று கூறினார். அதற்கு shut up (வாயை மூடுங்கள்) என்று அர்ச்சுனா கூறினார்.

இதன்போது குறிக்கிட்ட தம்பிராசா, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். Shut up என்று எல்லாம் கூற முடியாது. இங்கே அதிகாரிகள்தான் உள்ளார்கள் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கதைக்கும்போது, கதைப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கின்றது என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றீர்களா என்று விட்டு தம்பிராசாவை பார்த்து "can you shut up" (உங்களது வாயை மூட முடியுமா?) என்றார்.

அத்துடன் சகாதேவனைப் பார்த்து "உங்களுடன் திருப்பி கதைத்ததற்காக ஒரு நாளில்8 அல்லது 10 பேரை இடமாற்றம் செய்துள்ளீர்கள். இதனை உங்களது கட்சியோடு வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட தம்பிராசா, ஒரு அரச அதிகாரியை பொது வெளியில் வைத்து அவமானப்படுத்தக் கூடாது. இடமாற்றம் பெற்றவர்கள் வேண்டும் என்றால்அமைச்சுக்கு முறையிடலாம் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா "நீங்கள் எந்தக்கட்சி? உங்களுக்குக் கிடைக்கவில்லைதானே nomination ஆகையால் அடுத்த முறைமுயற்சியுங்கள். தயவு செய்து தம்பிராசாவை வெளியேற்றுங்கள். ஒரு பொம்பிளை பிள்ளையைப் பற்றி முகநூலில் எவ்வளவு எழுதுகின்றீர்கள். வெளியே போம் என்றார்.

அதற்குப் பதிலளித்த தம்பிராசா "நீங்கள் இரவு பகலாக ஒரு பொம்பிளையைக் கொண்டு திரிகிறாய் என்றார்.

அதற்குப் பதிலளித்த அர்ச்சுனா "நான் ஒன்றைத்தான் கொண்டு திரிகிறேன். நீங்கள் எத்தனையைக் கொண்டு போய் வெளிநாடுகளில் கொடுத்தீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். எதற்காக இவரை அழைக்கின்றீர்கள். இவர் ஒரு அழையா நபர் ஆகையால்வெளியே செல்லுங்கள். அமைச்சர் அவர்களே ஒரு அழையா நபரை உள்ளே விட்டு ஏன் பிரச்சினையை உருவாக்குகின்றீர்கள். இவர் யார்? என்ன அடிப்படையில் உள்ளே வந்தார் என்றார்..

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில் இனிமேல் பொதுமக்களுக்கோ ஊடகங்களுக்கோ அனுமதி இல்லை. பொதுமக்கள் முறையிட வேண்டுமாக இருந்தால் நாங்கள் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் உள்ளோம், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள், அவர்களிடம் முறையிடுங்கள் என்றார். (ம-7,315)

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.12.2024 வெற்றி வாரம் 405
N 5 6 8 1 4 9
55954
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,939,926.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2671
சீட்டிழுப்பு திகதி 2024.12.26 தினம் வியாழக்கிழமை
04 16 37 52 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,136,231.20

சனிதா
திகதி 26.12.2024 வெற்றி வாரம் 4832
27 39 58 62 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,685,139.20
37232

சசிரி
வெற்றி வாரம் 586
சீட்டிழுப்பு திகதி 26.12.2024 வியாழக்கிழமை
04 34 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4383
சீட்டிழுப்பு திகதி 26.12.2024 தினம் வியாழக்கிழமை
09 17 32 51
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,890,463.60
182650

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 14 23 29 40 71
1847
26.12.2024 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.559,450,936.60

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2497
சீட்டிழுப்பு திகதி: 2024.12.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,419,901.60
18 20 58 63 Q
205122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322 Visit Visas
077 77 19 322 Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1897)



## மாடி வீடு விற்பனைக்கு

கடற்கரை வீதி பாசையூரில் 1 ½ பரப்பு காணியுடன் மாடி வீடு விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (05 Rooms, Attached bathroom)

076 642 3605
021 222 7893
076 286 9558
(2850)



## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (675)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்




077 773 0900


## ரூ. 552 மில்லியன் சீனாவால் நிதி உதவி

(கொழும்பு)

சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு 552 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் கலைஞர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக இந்த நிதி வழங்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இது தொடர்பான வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நடவடிக்கைகள் இன்று இடம் பெறவுள்ளது. (ம-7)


## வீடு வாடகைக்கு தேவை

**13 வருட காலமாக இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவைப்படுகின்றது.**

1. திருநெல்வேலி (பலாலி றோட்)
2. கோப்பாய் (பருத்தித்துறை வீதி)
3. மானிப்பாய் (யாழ்ப்பாணம் வீதி/ சுதுமலை வீதி)
4. பண்டத்தரிப்பு (சண்டிலிப்பாய் வீதி)

உரிய முற்பணம், தகுந்த வாடகைப் பணம் வழங்கப்படும். (2841)

077 337 4261



## வீடு விற்பனைக்கு

நாவலர் வீதி, அன்னசத்திர லேனில் 1 ½ பரப்பில் அழகிய ஆறு அறைகள் கொண்ட மாடி வீடு அமைதியான சூழலில் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை குறிப்பு ( Town venus Hospital மிக அருகில் அமைந்துள்ளது.)

தொடர்புகொள்ள

076 639 4574
077 370 7195
(2857)



## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் கைதடி மெயின் றோட்டுடன் 36 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 1 ½ , 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப் பாதையுடன், நிலப் பரப்பு, மேட்டு நிலம், நன்னீரூற்று
- UDA அனுமதி, பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்,
- தரகர் தேவையில்லை
- பரம்பரை ஆவணம்
- பார்வையிடும் நேரம் : காலை 8.00 முதல் மதியம் 1.00 வரை பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 வரை

குரு (2858)

076 069 1105/ 076 298 1105


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 28 07 1946



அம்பிகை அடியில் 25 12 2024

**கலாபூஷணம், சமூகசோதி நீர்வைக் குரிசில்**

**விஸ்வப் பிரம்ம ஸ்ரீ தர்மலிங்கம் பரராசசிங்கம் (JP)**

**நீர்வேலி காமாட்சி அம்மன் ஆலய தர்மகர்த்தா, முன்னாள் உரிமையாளர், நீர்வேலி அம்பாள் ஹாட்வெயர்ஸ், சுன்னாகம் ஸ்ரீ அம்பாள் ரேட்ஸ்**

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் தர்மலிங்கம் பரராசசிங்கம் அவர்கள் 25.12.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சமூகத் தொண்டன் தர்மலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அமரர் லோகேஸ்ரியின் அன்புக் கணவரும் அமரர் கனகாம்பிகை செல்வநாயகம் அவர்களின் அருமைச் சகோதரனும் தர்மகுமாரன் (ஆங்கில போதனாசிரியர் - தொழில்நுட்பக் கல்லூரி மன்னார், யாழ்ப்பாணம்), தர்மசங்கரன்(பொறுப்பதிகாரி - பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவு, யாழ். மாநகர சபை), தர்மரூபன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீபிரியா(முகாமைத்துவ உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச சபை), வாலாம்பிகை (முன்னாள் உத்தியோகத்தர் IT Park), சாருஜா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் நேருக்சன், சிஜிசன், வைசகி, கேசிகன், பராபரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 27.12.2024 வெள்ளிக்கிழமை நீர்வேலி வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் நீர்வேலி சிவியாக்காடு இந்து மயானத்தில் பி.ப 1.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"மிதிலா",
காமாட்சி அம்மன் கோவிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (2842)

தகவல்:
குடும்பத்தினர்
077 792 3653, 075 163 0562

# 23ம், 2ம் ஆண்டு நினைவலைகள்



அமரர்கள்

**கதிரவேலு தவராசா** திதி 05.01.2025

**தவமணி தவராசா** திதி 27.12.2024

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய் என்றென்றும்
ஒளி வீசும் அகல் விளக்கே எம்மை விட்டுப் பிரிந்தாலும்
பல நூற்றாண்டுகள் எம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்
எம் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

என்றும் நீங்கா உங்கள்
நினைவலைகளுடன் ஏங்கித் தவிக்கும்
ஆருயிர் பிள்ளைகள், அன்பு மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்
0094707872828

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (645)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.